செய்தி வெளியீடு எண்: 681 நாள்: 20.09.2018

## செய்தி வெளியீடு

## பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற அழுகும் பொருட்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின் முதல்கட்டமாக கிருஷ்ணகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களுக்கான அழைப்புக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை விவசாயிகளை ஒருங்கிணைத்து, அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினை குறைக்கவும், உற்பத்தி செய்யும் பொருட்களை தரமானதாகவும், நியாயமான விலையிலும் நுகர்வோர்களுக்கு வருடம் முழுவதும் தடையின்றி வழங்கவும், பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற அழுகும் பொருட்களுக்காக 398 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ‘‘விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்’’ தமிழ்நாட்டில் "அச்சு மற்றும் ஆரம்" அமைப்பில் கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளை ஒருங்கிணைத்து தோட்டக்கலைத் துறையின் உதவியுடன் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை 487 சேகரிப்பு மையங்கள் மற்றும் 58 முதன்மை பதப்படுத்தும் மையங்கள் மூலம் பிரதான சந்தைகளுக்கு எடுத்துச்செல்லத் தேவையான போக்குவரத்து வசதிகள், சுத்திகரிப்பு, தரம் பிரிப்பு மற்றும் குளிர்பதன சேமிப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகிறது. முதன்மை பதப்படுத்தும் மையங்களில் அறுவடைக்குப் பிந்தைய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் கோயம்புத்தூர் மற்றும்

கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முடிவடைந்துள்ள நிலையில் ஏனைய 8 மாவட்டங்களில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தினை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல தமிழ்நாடு அரசிற்கும் புதுடில்லியில் உள்ள ''நிதி ஆயோக் (NITI Aayog)'' அமைப்பிற்கும் இடையே 04.11.2017 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, தேர்வு செய்யப்பட்ட கோயம்புத்தூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தமிழக அரசின் முதலீடு அதிகமாக உள்ளதால், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் இத்திட்டத்தினை செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 136 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 10 முதன்மை பதப்படுத்தும் மையங்களும், கோயம்புத்தூரில் 40 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 முதன்மை பதப்படுத்தும் மையங்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக தேசிய மற்றும் மாநில அளவிலான முதலீட்டாளர்களின் ஆதரவு, அவர்களின் கருத்துக்கள், வாய்ப்புகள் மற்றும் அரசின் ஆதரவு குறித்த முதலீட்டாளர்கள் கூட்டம் தாஜ் கிளப் ஹவுஸ், சென்னையில் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையால் 20.09.2018 அன்று நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மத்திய அரசின் நிதி ஆயோக்கின் (NITI Aayog) இணை செயலாளர் மற்றும் ஆலோசகர் திரு விக்ரம் சிங் கௌர், IFS., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர், திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., இயக்குநர், திரு.எஸ்.ஜெ.சிரு, இ.ஆப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர், இந்திய உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப மையம் (IIFPT), தமிழ்நாடு அரசின் நிதித்துறை ஆலோசகர், தலைவர், இந்திய தொழில் கூட்டமைப்பு (CII), தென்மண்டலம் மற்றும் தமிழ்நாடு, E&Y குழு, புதுடில்லி, பல்வேறு தேசிய மற்றும் மாநில அளவிலான நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், உழவர் உற்பத்தியாளர்

நிறுவனங்கள், துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ்நாட்டில் இத்திட்டத்தை செயல்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும், அரசின் பிற உதவிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டு, முதலீட்டாளர்கள் இந்த இரு மாவட்டங்களிலும் முதலீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டது.

இறுதியாக, கிருஷ்ணகிரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும், விவசாயிகளிடமிருந்து காய்கறி மற்றும் பழங்களைக் கொள்முதல் செய்து, முதன்மை பதப்படுத்தும் நிலையங்களை இயக்கும் பொருட்டு, வேளாண் சார்பான முதலீடுகள் செய்வதற்கான குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் என கூறப்பட்டது. முதலீட்டாளர்கள் ஒவ்வொரு மையத்திலும், பழங்கள் மற்றும் காய்கறிகளில் சிப்பம் கட்டுதல், தரம் பிரித்தல் மற்றும் பதப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ள பதப்படுத்தும் இயந்திரங்களை நிறுவ கேட்டுக் கொள்ளப்பட்டது. முதலீட்டாளர்கள் விவசாயிகளின் விளைபொருளுக்கு நல்ல விலை அளிப்பதோடு, தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் விற்பனை மேற்கொள்ள நேரடி தொடர்பும் நுகர்வோருக்கு சகாய விலையில் காய்கறிகளும், பழங்களும் கிடைக்கவும் வழிவகை செய்யப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**